# தேங்காய் மற்றும் கொப்பரை விலை அதிகரிக்க வாய்ப்பில்லை

தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகத்தில், வேளாண் மற்றும் ஊரக மேம்பாட்டு ஆய்வு மையத்தில் இயங்கி வரும் தமிழ்நாடு பாசன விவசாய மேம்பாட்டுத் திட்டத்தின் விலை முன்னறிவிப்புத் திட்டமானது, தேங்காய் மற்றும் கொப்பரைக்கான விலை முன்னறிவிப்பை உருவாக்கியுள்ளது. உலகளவில் இந்தோனேஷியா, பிலிப்பைன்ஸ் மற்றும் இந்தியா ஆகியவை தென்னை உற்பத்தியில் முன்னணியில் உள்ள நாடுகளாகும். இவை மூன்றும் இணைந்து உலகளாவிய தேங்காய் உற்பத்தியில் 75 சதவீதத்தைக் கொண்டுள்ளன. இந்தியாவில், தென்னை முக்கியமாக கேரளா (7.65 இலட்சம் எக்டர்), தமிழ்நாடு (4.46 இலட்சம் எக்டர்), கர்நாடகா (6.28 இலட்சம் எக்டர்) மற்றும் ஆந்திரப் பிரதேசம் (1.05 இலட்சம் எக்டர்) மற்றும் இந்த நான்கு தென் மாநிலங்கள் சேர்ந்து 2022-23 ஆம் ஆண்டில் நாட்டின் மொத்த உற்பத்தியில் 91 சதவிகிதம் பங்களிக்கின்றன.

தமிழ்நாட்டில், 2022-23 ஆண்டில் தேங்காய் 4.46 இலட்சம் எக்டர் பரப்பளவில் பயிரிடப்பட்டு 35.12 இலட்சம் டன்கள் உற்பத்தி செய்யப்பட்டுள்ளது. கோயம்புத்தூர், திருப்பூர், தஞ்சாவூர், திண்டுக்கல் மற்றும் கன்னியாகுமரி ஆகிய மாவட்டங்களில் தேங்காய் அதிகளவு பயிரிடப்படுகின்றது. வர்த்தக மூலங்களின் படி, கிருஷ்ணகிரி, தர்மபுரி, பொள்ளாச்சி, பல்லடம், ஈரோடு, திருப்பூர், சேலம், காங்கயம் மற்றும் தேனி ஆகிய பகுதிகளில் இருந்து காங்கேயம் சந்தைக்கு வரத்து வருகிறது. மேலும், கர்நாடகா மற்றும் கேரளா ஆகிய மாநிலங்களிலிருந்தும் ஜூன்'23 மாதத்திலிருந்து வரத்து வரத் தொடங்கியுள்ளது.

எண்ணெய் ஆண்டின் முதல் பாதியில் (நவம்பர்'22-ஏப்ரல்'23) தாவர எண்ணெய், குறிப்பாக பாமாயில் இறக்குமதி அதிகரித்ததாலும், சுத்திகரிக்கப்பட்ட

மற்றும் கச்சா சமையல் எண்ணெய்க்கான குறைந்த இறக்குமதி வரி காரணமாகவும் கொப்பரை விலையில் விரைவான சரிவு ஏற்பட்டுள்ளது.

கொப்பரை பதப்படுத்தும் காலத்தில் சீரற்ற மற்றும் உபரி மழை காரணமாக கொப்பரையின் தரம் குறைந்துள்ளதாகவும் வியாபாரிகள் தெரிவித்துள்ளனர். தேங்காய் எண்ணெயின் தேவை மற்றும் விநியோக நிலையால் அரைக்கும் கொப்பரையின் விலை பாதிக்கப்படுகிறது. இருப்பினும், தேங்காய் எண்ணெயின் விலை இறக்குமதி செய்யப்படும் பாமாயிலின் விலையால் பெரிதும் தாக்கத்திற்கு உள்ளாகிறது.

மேலும், விலை முன்னறிவிப்புத் திட்ட குழு, கடந்த 15 ஆண்டுகளாக ஈரோட்டில் உள்ள அவல்பூந்துறை ஒழுங்குமுறை விற்பனைக் கூடம் மற்றும் பெருந்துறை வேளாண் உற்பத்தி கூட்டுறவு மையத்திலும் நிலவிய தேங்காய் மற்றும் கொப்பரையின் விலை மற்றும் சந்தை ஆய்வுகளை மேற்கொண்டது. ஆய்வு முடிவுகளின் அடிப்படையில் அக்டோபர் '2023 வரை தரமான தேங்காயின் பண்ணை விலை ரூ.10 முதல் 12 வரை இருக்கும் மற்றும் தரமான கொப்பரையின் பண்ணை விலை கிலோவிற்கு ரூ.75 முதல் ரூ.80 வரை இருக்கும் எனக் கணிக்கப்பட்டுள்ளது. எனவே, விவசாயிகள் மேற்கூறிய சந்தை ஆலோசனை அடிப்படையில் விற்பனை முடிவுகளை எடுக்குமாறு பரிந்துரைக்கப்படுகின்றனர்.

**மேலும் விவரங்களுக்கு, தொடர்பு கொள்ளவும்**

1. உள்நாட்டு மற்றும் ஏற்றுமதி சந்தைத் தகவல் மையம்
வேளாண் மற்றும் ஊரக மேம்பாட்டு ஆய்வு மையம்
தமிழ்நாடு வேளாண்மை பல்கலைக்கழகம்
கோயம்புத்தூர் 641003
தொலைபேசி : 0422-2431405

2. இயக்குனர் மற்றும் முனை அதிகாரி
நீர் மற்றும் புவியியல் ஆய்வு மையம்
தமிழ்நாடு வேளாண்மை பல்கலைக்கழகம்
கோயம்புத்தூர் 641003
தொலைபேசி : 0422-6611278

**தொழில் நுட்ப விவரங்களுக்கு, தொடர்பு கொள்ளவும்**

பேராசிரியர் மற்றும் தலைவர்
வாசனை மற்றும் மலைத்தோட்ட பயிர்கள் துறை
தமிழ்நாடு வேளாண்மை பல்கலைக்கழகம்
கோயம்புத்தூர் 641003
தொலைபேசி : 0422-6611284

**Coconut and Copra prices will not Soar**

The TN-IAM Project funded Price Forecasting Scheme of the Centre for Agricultural and Rural Development Studies, Tamil Nadu Agricultural University, Coimbatore has developed market advisory for coconut and copra.

Globally Indonesia, Philippines and India are the leading coconut growing countries and these countries together account for 75 per cent of the global output of coconut. Within India, coconut is grown mainly in Kerala (7.65 lakh ha), Tamil Nadu (4.46 lakh ha), Karnataka (6.28 lakh ha) and Andhra Pradesh (1.05 lakh ha), together account for 91 per cent of the total production in the country during 2022-23.

Tamil Nadu produced 35.12 lakh tonnes of coconuts from 4.46 lakh hectares in 2022-23. The major coconut growing districts are Coimbatore, Tiruppur, Thanjavur, Dindigul and Kanyakumari. According to the trade source, arrivals from Krishnagiri, Dharmapuri, Pollachi, Palladam, Erode, Tiruppur, Salem, Kangayam and Theni to Kangeyam market. Market, arrivals from Karnataka and Kerala have commenced from June, 2023 and will continue till September, 2023.

Due to surge in imports of vegetable oil, especially palm oil during First half of the Oil Year (November'22 – April'23) and also minimal tariff for imported refined and crude edible oil led to rapid decline in the copra price. Traders have also reported that, the quality of copra has come down due to inconsistent and surplus rainfall during the period of processing. The price of milling copra is influenced by the demand and supply position of coconut oil. However, the price of coconut oil is influenced by the cheaper imported vegetable oil, like any other domestic edibles oils.

The price forecasting team has analyzed the past 15 years prices for coconut and copra that prevailed at Avalpoonthurai Regulated Market of Erode

district and Perundurai Cooperative Marketing Society. As per the results of the analysis, the farm gate price of good quality coconut during October, 2023 will be Rs. 10-12 per nut. Price of good quality copra will rule around Rs. 75-80 per kg. The price may subject to change based on the arrivals from other states. Hence, farmers are advised to take selling decision accordingly.

***For Market information, please contact:***

*(i) Domestic and Export Market Intelligence Cell*
*Centre for Agricultural and Rural Development Studies (CARDS)*
*Tamil Nadu Agricultural University*
*Coimbatore - 641 003.*
*Phone: 0422-2431405*

*(ii)The Director and TN-IAMP Nodal Officer*
*Centre for Water and Geospatial Studies*
*Tamil Nadu Agricultural University*
*Coimbatore - 641 003.*
*Phone: 0422-6611278*

***For Technical Details, please contact:***
*Professor and Head*
*Department of Spices & Plantation Crops*
*Tamil Nadu Agricultural University*
*Coimbatore -641003.*
*Phone -0422 -6611284*